முதன்மைக்கல்வி அலுவலகம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
அலுவலக குறிப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கு.கோ.எண். 22/NS-NOP/ஒபக/2026

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம்- நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) - பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகள்/ கல்வி இணைச் செயல்பாடுகள்- திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி- அரசு மேல்நிலைப்பள்ளி இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்குதல்- மாவட்ட ஆட்சியர் அனுமதி வேண்டி- கோப்பு பணிந்து சமர்ப்பித்தல்- சார்பு.

பார்வை : திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரியின் இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவர் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) இணையதளத்தில் விண்ணப்பித்த கடித நகல் நாள்: 27.07.2026.

------------------------

மேற்காணும் பொருள் மற்றும் பார்வையில் காணும் கடிதத்தின்படி, திருப்பத்தூர் மாவட்டம், ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மூலம் **"நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி"** (NS-NOP) திட்டத்தின் கீழ், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் /தனிநபர் பள்ளிகளில் கல்விசார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகளில் பங்கேற்க விரும்பின், தங்களது கருத்துருவை இணைய வழியே சமர்ப்பிக்கவும், அவற்றினை பரிசீலித்து அனுமதி வழங்குதல் உள்ளிட்டவற்றை விரைவுபடுத்த ஏதுவாக, இணையவழி அமைப்பு உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் தங்களது கருத்துருவை https://nammaschool.tnschools.gov.in/#/register/ npo=signup என்ற இணையதளம் மூலம் சமர்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இணையவழியே பெறப்படும் கருத்துருவானது, கீழ்கண்ட அரசு சாரா தொண்டு நிறுவனம்/ தனிநபரின் பங்களிப்பை செயல்படுத்தும் விதமாக அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வக கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள, ஒரு நாள் பயிற்சி வழங்குதல் குறித்து உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வழங்கும் பொருட்டு, தங்களின் மேலான அனுமதி வேண்டி, இக்கோப்பு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பதிவு செய்துள்ள தனிநபரின் பெயர் மற்றும் பதவி | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **Dr. M.JOSE**, Associate Professor, Sacred Heart College (Autonomous), Tirupattur. | 51 அரசு மேல்நிலைப்பள்ளிகள், திருப்பத்தூர் மாவட்டம் |

அ/13

மாவட்ட ஆட்சியர்
திருப்பத்தூர் மாவட்டம்.

28/7/2026

COLLECTOR'S CAMP OFFICE
பெறப்பட்ட நாள் 28.07.2026
திருப்பட்ட நாள் 29.07.2026

திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 22/NS-NOP/ஒபக/2026 நாள்: 30.07.2026

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம்- நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) - பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகள்/ கல்வி இணைச் செயல்பாடுகள்- அனைத்து அரசு/அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளி இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்குதல்- பயிற்சியில் கலந்துகொள்ளுதல் -சார்பு.

பார்வை : 1. திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி, இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவர் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) இணையதளத்தில் விண்ணப்பித்த கடித நகல் நாள்: 27.07.2026.

2. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறிப்பு கோப்பு அனுமதி நாள்: 28.07.2026

---

மேற்காணும் பொருள் மற்றும் பார்வையில் காணும் கடிதத்தின்படி, திருப்பத்தூர் மாவட்டம், ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மூலம் **"நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி"** (NS-NOP) திட்டத்தின் கீழ், பள்ளிகளில் கல்விசார்/கல்வி இணை செயல்பாடுகள் நிகழ்வுகளின்படி, தூயநெஞ்சக் கல்லூரியின் இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவரின் பங்களிப்பை செயல்படுத்தும் விதமாக, **அனைத்து அரசு/ அரசு நிதியுதவிப் பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு** வகுப்பறை மற்றும் **ஆய்வக கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள** ஒரு நாள் பயிற்சி **19.08.2026** அன்று காலை 9.00 மணியளவில் **திருப்பத்தூர் தூயநெஞ்ச கல்லூரி (DMT Hall) வளாகத்தில்** வழங்கப்படவுள்ளது.

ஆகவே, அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்கள் பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாக உரிய நாளில் பணிவிடுப்பு செய்து அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : இயற்பியல் முதுகலை ஆசிரியர்கள் பெயர்பட்டியல்.

F/C

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர் :

அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல் :

1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருப்பத்தூர் மாவட்டம்.
2. முதல்வர், தூயநெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ), திருப்பத்தூர் மாவட்டம்.